தொகுதி மக்களின் சார்பாகவும் என் நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 242, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

242—

பேருந்துப் பணிமனை

***5399—திரு. வெ. பொன்னுப்பாண்டி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பில் பேருந்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி வத்திராயிருப்பு மற்றும் சுற்றியுள்ள கிராமங்களுக்கு 30 நகரப் பேருந்துகள்வரை இயக்கப்பட்டு வருகின்றன. இவையனைத்தும் தற்போது ஸ்ரீவில்லிபுத்தூர் பணிமனையிலிருந்து இயக்கப்பட்டு வருகின்றன. எனவே இவற்றைக் கருத்தில்கொண்டு, வத்திராயிருப்பு புதிய பணிமனை அமைக்க 3 ஏக்கர் நிலம் தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மாவட்ட நிருவாகத்திடம் நிலம் பெறப்பட்ட பிறகு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவு பெற்று பணிமனை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.*

முற்பகல் 10—35

திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஊராட்சி*

2012 மே 9]

ஒன்றியம், நான்கு பேரூராட்சிகளையும், 27 சிற்றூராட்சிகளையும் உள்ளடக்கிய, 1 இலட்சத்து 65 ஆயிரம் மக்கள்தொகை கொண்ட பகுதி. இந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய உத்தரவிற்கிணங்க, அரசு இந்தப் பகுதியிலே போக்குவரத்துப் பணிமனை அமைக்கும் என்பதை அறிவித்த மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்று மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை உள்ளது. (குறுக்கீடுகள்) இரண்டு அமைச்சர்களின் மானியக் கோரிக்கைகள் உள்ளன. (குறுக்கீடுகள்) தயவு செய்து நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டியில் பெட்ரோல் குண்டு வீசியவர்கள் மீது . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் அதுகுறித்து அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள்.* It is under my examination. Please sit down. *(குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் என்னுடைய ஆய்வில் இருக்கின்றன.* Please sit down.